REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 234

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY — THE OFFICIAL ORGAN OF: THE D.F.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: பங்குனி 2உ திங்கள் (15—3—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 3உ செவ்வாய் (16—3—54)

தென்னாட்டு எழுச்சியின் எதிரொலி!

இலங்கை இந்தியருக்கு எதிராகப் 'போர்க்கோலம்!'

தோட்டத்தொழிலாளரை ஒழித்துவிட எதிர்க்கட்சித் தலைவரின் 'கங்கணம்!'

கொழும்பு, மார்ச் 14—

"எனது அடுத்த இயக்கம் தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஒரு லட்சம் பேர் கொண்ட படையைத் திரட்டுவதேயாகும்; இந்தத் தோட்டங்களில் இந்தியத் தொழிலாளரை நீக்கிவிட்டு, இலங்கையர்களை அவ்வேலையில் அமர்த்தத் தயாரா, இல்லையா என்பதை அப்போது பார்த்துவிடுவோம்; இந்தியத் தொழிலாளர்களில்லாமலே இத்தோட்டங்களை நடத்தப் போதுமான தொழிலாளிகள் இலங்கையிலேயே இருக்கிறார்கள்; இந்தியருக்காக நாட்டையும், சமூகத்தையும் பலி கொடுப்பதைவிட, நம்மிடம் போதுமான தொழிலாளிகள் இல்லாவிட்டால், சில தோட்டங்களை மூடிவிடுவதே மேலாகும் என்பேன்,"

—இவ்வாறு, குடிமக்கள் உரிமை சம்பந்தமான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைக் கண்டிப்பதற்காக நடந்த பொதுக்கூட்டத்தில், பார்லிமெண்டு எதிர்க் கட்சித் தலைவர் பண்டார நாயகா தெரிவித்தார்.

"நாட்டைக் காப்பாற்றுவதற்கான பெரும் முயற்சியில் இலங்கையில் இந்தியர் நடத்தும் கடைகளையும், வர்த்தகத்தையும் பகிஷ்கரிக்க வேண்டும்" என்று அவர் மேலும் வலியுறுத்திப் பேசினார்.

பர்மாவில் குடி உரிமை பெற்றவர் எண்ணிக்கை

ரங்கூன், மார்ச் 14—

பர்மாவில் 1953—54ல் 985 பேர் குடி உரிமைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களில் இந்தியர் பாகிஸ்தானிகள், இலங்கையர்கள், சீனர்கள் ஆகியோர் மொத்தம் 702 பேர்.

இந்தியை தேசிய மொழியாக்கியதால் இந்நாட்டில் ஏற்பட்டுள்ள விபரீதம்!

கல்வியின் இலட்சிய அடிப்படையிலேயே இருள் சூழ்ந்து விட்டது!

அரசியல் அதிகாரமும் — ஆட்சியும் தங்களிடம் இருப்பதால் ஆணவம் கொள்வது கூடாது

அறிவுக் களஞ்சியமான ஆங்கிலத்தை அலட்சியப்படுத்துவது ஆபத்தான செய்கையாகும்!

ஆட்சியாளருக்கு ஆற்காடு இராமசாமி எச்சரிக்கை

நாலந்தா, மார்ச் 15—

"ஆங்கிலம், எந்த ஒரு குறிப்பிட்ட நாட்டின் சொந்த மொழியாகவோ, அல்லது ஏதாவதோரு ஏகாதிபத்திய வல்லரசின் மொழியாகவோ இருக்கவில்லை; மாறாக, ஆங்கிலத்தின் மூலம்தான் இன்றைக்கு வளர்ந்துள்ள விஞ்ஞான அறிவு, தொழில் நுணுக்கக் கல்வி, மருத்துவம் போன்ற இன்ன பிறதுறைக் கல்வி எல்லாம் பெரும் அளவில் பரவி வருகின்றன. அறிவுக் களஞ்சியமாயிருக்கும் ஆங்கிலக் கல்வியை நாம் புறக்கணிப்பது நமது முன்னேற்றக் கதவுகளை நாமே மூடிக்கொண்டதாகும்,"

"பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், தேசிய மொழி என்று சொல்லப்படுகிற ஒன்றை கட்டாயமாகப் பாடங்கள் போதிக்கும் மொழியாக ஆக்கியது, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில், மிகவும் கசப்பான கருத்து வேறுபாடுகளை உண்டு பண்ணியுள்ளது. தென்னிந்தியாவிலிருந்து வருகிற நான், அங்குள்ள மக்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும் ஓரளவு அறிந்திருப்பதால், விரிவாகப் பேசப்படும் தேசிய மொழி பரவுவதின் அவசியத்தை உணர்ந்தவன் என்ற முறையில், இதில் அவசரப்படுவது நல்லதல்ல என எச்சரிக்கிறேன். தேசிய மொழியில் நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் நிபுணராக ஆக்குவது எந்த ஒரு நாட்டிலும் இயலாதது என்றே நான் கருதுகிறேன்."

"அரசியல் அதிகாரமும், பதவியும் தங்களிடம் சிக்கியிருக்

(4-ம் பக்கம் பார்க்க)

கிழக்கு வங்கத்தில் கவர்னர் ஆட்சி

கராச்சி, மார்ச் 14—

கிழக்கு வங்காளத்தில் கவர்னர் ஆட்சியை பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் பிரகடனம் செய்தார். புது மந்திரி சபை அமைக்கப்படும்வரை கவர்னர் ஆட்சி நீடிக்குமென்று தெரிகிறது.

கிழக்கு வங்கத்தில் இப்பொழுதுதான் தேர்தல்கள் முடிவடைந்து முடிவுகள் தெரிய ஆரம்பித்திருக்கிறது.

இலங்கை சர்க்காருக்கு எச்சரிக்கை

அநியாயமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டாமெனக் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 14—

"டில்லி ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ள நல்லெண்ண, நேச உணர்ச்சிகளைக் கெடுக்கும் ரீதியில் ஒப்பந்தத்துக்கு அநியாய விளக்கம் கூறவோ, ஒப்பந்தத்தை விபரீதமாக அமுல் நடத்தவோ வேண்டாம்."

—என்று இலங்கை இந்தியர் காங்கிரஸ் இலங்கை சர்க்காரைக் கேட்டுக்கொண்டது.

"உத்தியோகங்கள் சம்பந்தமாக 'இலங்கையர்' என்ற பதத்துக்கு இலங்கை சர்க்கார் புதிதாக அறிவித்துள்ள விளக்கமும், நாடற்றவர்களுக்குப் புதுவேலை அளிக்கப் போவதில்லை என்று சர்க்கார் கூறுவதும் டில்லி ஒப்பந்தத்தின் நோக்கத்துக்கு முரணானவை" என்று மேலும் சுட்டிக் காட்டப்பட்டு இருக்கிறது.

போஸ் பிறந்த இல்லம்

கல்கத்தா, மார்ச் 14—

சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த இடமான ஜானகிநாத் பவனத்தை ஒரிசா சர்க்கார் மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

'குடி உரிமையா? வெளியேற்றமா?'

இரண்டு ஆண்டுகளில் தெரியுமென்கிறார் பிரதமர்!

கொழும்பு, மார்ச் 15—

"எத்தனை இந்தியர்கள் இலங்கைக் குடி உரிமைக்குத் தகுதி பெறுவர் என்பதும், எத்தனை இந்தியரைத் திருப்பி அனுப்ப வேண்டுமெனத் தெரிவதற்கும் இன்னும் இரண்டு ஆண்டுகளாகும்"

என்று இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, ஒரு சொற்பொழிவில் குறிப்பிட்டு, மேலும் கூறியதாவது:

"இந்த விவரம் தெரிந்த பிறகே, டில்லி ஒப்பந்தம் பற்றிய சட்ட திட்டங்களைப் பூரணமாக அமுல் நடத்த முடியும்," என்றார்.

தூத்துக்குடி சதி வழக்கு

19-ந் தேதி ஒத்திவைப்பு

திருநெல்வேலி, மார்ச் 15—

தூத்துக்குடி கலவர வழக்கு விசாரணை தொடர்ந்து நடந்து எதிர்தரப்பு சாட்சியங்கள் விசாரணை முடிவடைந்தது.

எதிர் தரப்பு 2-வது சாட்சியாக தோழர் வி. கிருஷ்ணன் விசாரிக்கப்படுகையில், அந்தக் குடியிலுள்ள நாகம்மாள் ஞாபகார்த்த லீக் செயலாளர் என்ற முறையில் தனது அலுவல்களையும் நாடகங்கள் ஏற்பாடு செய்த விவரங்களையும் தெரிவித்தார். மேற்கொண்டு விசாரணை 19-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சிந்துவில் மதுவிலக்கு

கராச்சி, மார்ச் 13—

சிந்து மாநிலத்தில் மதுவிலக்கை அமுலுக்கு கொண்டுவரப் போவதாக மேற்படி மாநில சட்டசபையில் முதன் மந்திரி தெரிவித்தார்.

பாகிஸ்தானில் மற்ற 3 மாநிலத்திலும் மதுவிலக்கு அமுலில் இருந்து வருகிறது. தலைநகரான கராச்சியிலும் மதுவிலக்கு அமுலுக்கு கொண்டுவர பாக். சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்.

மதுரையிலிருந்து ஒருவர் திருநெல்வேலி மாவட்டம், பாபநாசத்தில் ஒரு காகித மில் நடத்த மனு செய்து கொண்டிருக்கிறார். அது [illegible] சர்க்காருக்கு அனுப்பப்பட்டு [illegible] பிற்பகல் [illegible] பெற்றது.

வடநாட்டு பிணைப்பைத் துண்டித்தாலன்றி தென்னாட்டு மக்கள் வாழ வழியில்லை!

—(:)—

96 பகுதிகளாகச் சிதறிக் கிடக்கும் நாடுகள் 'தனிக்கோடு' கீறி வாழ்வதற்குப் பாடுபடவில்லையா?

—(:)—

மக்களின் மனப்பண்பை மதியாதவர்களின் மனோபாவம் பற்றி தோழர்கள் நெடுஞ்செழியன், காஞ்சி-கல்யாணசுந்தரம் பேச்சு

சென்னை, மார்ச் 15—

"24,000 மைல் சுற்றளவுள்ள உலகம் ஒரே ஆட்சியின்கீழ் இருக்கவில்லை—96 நாடுகளாகச் சிதறித்தான் கிடக்கிறது. ஒரே உலகமாக, வெண்டல் வில்கி கூறியதுபோல இருக்கக்கூடாதா என்றால், கூடாது என்பதல்ல—கூடவில்லை—ஒன்றாக இருக்க இயலவில்லை; ஒன்றாக இருக்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது—ஆனால், முடிகிறதா என்றால், இல்லையே?

"உலகத்தில் 96 நாடுகளும் தங்களுக்கெனத் தனித்தனி எல்லைகளைக் கீறிக்கொண்டு வாழ்கின்றன என்றால், ஏன்? எதற்காக?—தங்கள் தங்கள் எல்லைக்கோட்டில் வாழும் மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், ஓய்வும், உல்லாச வாழ்வும் தரத்தான் முழு மூச்சோடு பாடுபடுகின்றன,

(4-ம் பக்கம் பார்க்க)

புதிய 'பெருந்தொகை' நோட்டுக்கள்!

புதுடில்லி, மார்ச் 14—

"1954 ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து, 1,000; 5,000; 10,000 ரூபாய் நோட்டுகள் வெளியிடப்படும். முந்திய நோட்டுகளுக்கு இவை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும்.

1946-ல் அவசரச் சட்டம் மூலம் திரும்பப் பெறப்பட்ட பழைய நோட்டுகள் செல்லாது; அந்நோட்டுக்களை வைத்துக் கொண்டு பேரம் நடத்துபவர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்," என்று சர்க்கார் குறிப்பொன்று கூறுகிறது.

நம் நாடு

தி.மு.கழக இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 15—3—54 திங்கள்

ஆள் பிடிக்கும் வேலை!

திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாவில், தலைமை வகித்துப் பேசிய சென்னை மாநில நிதி அமைச்சர், உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர், கல்லூரி முதல்வர் முதலிய நியமன விஷயங்களில், தாம் ஒரு சிறந்த திட்டம் தீட்டி இருப்பதாக அறிவித்திருக்கிறார். சர்க்காரின் மேற்பார்வையில் நடைபெறும் உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் விஷயங்களில், தாம் உருவாக்கியுள்ள அந்த அருமையான திட்டத்தையே, நடைமுறைக்குக் கொண்டு வருவதெனத், தாம் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாகவும், அதே அமைச்சர் கர்ஜனை செய்துமிருக்கிறார்.

இதை நேற்று நாம் நமது இதழில் வெளியிட்டிருக்கிறோம். அதைப் படிக்கும் வாசகர்கள், தலைமை ஆசிரியர்கள் நியமன விஷயத்தில் அமைச்சர் கொண்டுள்ள முடிவைப் பார்த்து, அமைச்சருக்கேற்பட்டுள்ள எதேச்சாதிகார புத்தியையும், மதக் கிறுக்கையும், பரிகசித்துப் பேசாமல் இருக்க மாட்டார்கள்.

திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியோ ஒரு ஆரியக் கலைக்கூடம் என்பதை அனைவரும் அறிவர். காலஞ்சென்ற ரைட் ஆனரபிள் வலங்கிமான் சீனிவாச சாஸ்திரி போன்றவர்கள் அந்தப் பள்ளியின் ஆசிரியர்களாக இருந்திருக்கிறார்கள் என்றால், அந்தப் பள்ளி சனாதனச் சூழ்நிலையில்தான் வளர்ந்திருக்கும் என்று முடிவு கட்டி விடுவது எவருக்கும் எளிதாகும். இடத்துக்கேற்ற இயல்புப்படியும், சந்தர்ப்பத்திற்கேற்ற சாதுர்யப்படியுமே, நிதி அமைச்சர், அவ்வாறு பேசி இருக்கக்கூடும் என்பதில் சிறிதளவு நியாயம்தான் இருக்க முடியும். மந்திரியின் உளறலுக்கு, முழுப் பொறுப்பாக இடத்தையும் சூழ்நிலையையும் கூறுவது கொஞ்சமும் பொருந்தாது

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக ஆவதற்கு, அதற்கான கல்விப் புலமையும், போதனா திறமையும் ஒருவருக்கு இருந்தால் மட்டும் போதாது. அவர்களுக்குக் கடவுள் பக்தி கட்டாயம் இருந்தாக வேண்டும் என்று, நிதி அமைச்சர் சுப்ரமணியம் ஒரு புதிய நிபந்தனையைப் போடுகிறார். அதாவது, தலைமை ஆசிரியராவதற்கு ஒருவருக்கு எவ்வளவு அருகதைகள் இருந்தபோதிலும், அவர் கடவுள் நம்பிக்கை பற்றவராக இருப்பாரானால், தலைமையாசிரியர் ஆக ஆவதற்குத் துளியும் உரிமை கிடையாது என்பது நிதி அமைச்சரின் புதிய சித்தாந்தம்!

நிதி அமைச்சரின் கருத்து நிரம்ப நியாயமானது என்றே நாம் விவாதத்திற்காக ஒப்புக்கொள்ளுவோம். குறிப்பிட்ட ஒரு ஆசிரியருக்குக் கடவுள் மீது பற்று இருக்கிறது அல்லது பற்றில்லை என்று அறிந்துகொள்வதற்கு, நிதி அமைச்சர் வைத்திருக்கிற ஏற்பாடு என்ன என்பது விளக்கமாகத் தெரிந்தாக வேண்டும். அந்தக் கண்டுபிடிப்பு முறையை அமைச்சர் அந்த ஆண்டு விழாக் கூட்டத்தில் அறிவிக்காமலேயே விட்டுவிட்டார். இனியாவது அறிவிப்பார் என்று எதிர்பார்ப்பதற்கு பொதுமக்களுக்கு உரிமை இருக்கிறது அதற்கான விளக்கத்தை அமைச்சர் தருவதை பிறகு பார்த்துக்கொள்ளலாம். ஒருவருக்குக் கடவுள் பற்று இருக்கிறதா இல்லையா என்று முடிவு கட்டுவது எவ்வாறு சாத்தியமாகும் என்பதை நாமாக ஆராய்ந்து பார்ப்போம்.

பொதுவாக மக்கள் தொகையில் பெரும் பகுதியினர், ஏதோ ஒருவகையில் கடவுள் பற்று கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள் என்பது விளக்கமான விஷயம். இந்தப் பொது விதியை அமைச்சர் ஏற்றுக்கொண்டவராக இருந்தால், குறிப்பிட்ட ஒரு துறையினர் விஷயத்தில் மட்டுமே, அவர்களுக்குக் கடவுள் பற்று இருக்கிறதா இல்லையா என்ற ஐயம் அமைச்சருக்கு ஏற்பட்டிருக்க நியாயமே இல்லை. பொதுவாகப் படித்தவர் அனைவர் விஷயத்திலும், குறிப்பாக ஆசிரியர் துறையினரிடமுந்தான், அமைச்சருக்கு அந்தச் சந்தேகம் தோன்றி இருக்கிறது. கடவுள் நம்பிக்கை அல்லது அவநம்பிக்கை விவகாரத்தில் ஆசிரியர் ஒவ்வொருவருடைய நிலையையும் கண்டறிவதாக இருந்தால், அவர்கள் அணிந்திருக்கிற மதசின்னங்களைக் கொண்டுதான் முடிவுகட்ட முடியும். நெற்றியில் திருநீறு, திருமண்ணை போட்டிருக்கும் ஆசிரியர்களைத்தான், கடவுள் பற்று கொண்டவர்கள் என்று முடிவு கட்டிவிடுவது, அமைச்சர் போன்ற அறிவினருக்கு இலகுவாக முடியும் காரியமாகும். அவ்வாறு வெளி வேடம் அணியாத—ஆனால், உண்மையான கடவுள் பற்றுக் கொண்டு வாழும்—ஆசிரியர்களை அமைச்சர் எப்படி கண்டறியப்போகிறாரோ நமக்குத் தெரியவில்லை. மேற்கூறிய வகையைச் சேர்ந்த கடவுள் பற்று கொண்ட ஆசிரியர்கள் அனைவரையும், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் என்று அமைச்சர் தீர்மானித்து, அவர்களை ஏதாவது பொய்க் காரணம் கூறி, வேலையில் இருந்து ஒரேயடியாக விலக்கிவிட்டாலோ, அவர்களுடைய முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டாலோ நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. நிற்க,

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களில் பெரும்பான்மையினர் அவர்கள் எவ்வளவு உள்ளுக்குள்ளாக வைதீகப் போக்குடையவர்களாக இருந்தபோதிலும்கூட, மதச் சின்னம் போட்டுக் கொண்டு பள்ளிகளுக்கு இப்போது வருவது கிடையாது. இந்த நிலை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டும் வருகிறது. இதை மாற்றி அமைப்பதற்காகத்தான், அமைச்சர் கடவுள் பக்தியை தலைமை ஆசிரியர் நியமன விஷயத்திற்கு ஒரு நிபந்தனையாக விதித்துள்ளாரோ என நாம் யூகிக்கிறோம். தங்கள் வேலையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசையினாலும், தாங்களும் தலைமை ஆசிரியராக ஆக வேண்டும் என்ற அவாவினாலும், இதுவரை மதச் சின்னமணிந்து பழக்கமில்லாத உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்கூட, இனி மதச் சின்னங்களை அணிந்து பள்ளிக்கு வர முற்படுவது எதிர்பார்க்கக் கூடியதேயாகும். இந்த அளவாவது மனமாற்றத்தை ஆசிரியர்களிடம் உண்டாக்கினால் போதுமென்ற நினைப்பில் அமைச்சர் அவ்வாறு கூறியிருந்தாலும் இருக்கலாம். எதை எதிர்பார்த்து அமைச்சர் அப்படிக் கூறியிருந்தாராலும் அது கண்டிக்கத்தக்கதேயாகும்.

ஒருவரை வேலைக்கு நியமிக்கும் விஷயத்தில், அவருடைய மதம், சாதி, பிறப்பிடம் காரணமாக பாரபட்சம் காட்டக் கூடாது என்கிறது அரசியல் சட்டம். அரசாங்கப் பணச் செலவில் நடத்தப்பெறும் கல்விக்கூடங்களில், மத போதனை அறவே அளிக்கக் கூடாதென்கிறது அரசியல் விதி. பள்ளிகளிலே நடைபெறும் இறை வணக்கத்திற்கு, மாணவர்களைக் கலந்துகொள்ளக் கட்டாயப்படுத்தக்கூடாது என்கிறது அதே சட்டத்தில் உள்ள ஒரு விதி

இவ்விதிகளை ஒழுங்காக நிறைவேற்றி வருகிறோம் என்று சத்தியம் செய்துவிட்டு பதவி பெற்றுள்ள நிதி அமைச்சர். தலைமை ஆசிரியர் நியமனத்திற்கு, ஒருவருக்குக் கடவுள் நம்பிக்கைக் கட்டாயம் இருந்தாக வேண்டும் என்ற விசித்திர நிபந்தனையைப் போடுகிறார்! விந்தையான மனிதர்! முன் யோசனையற்றுப் பிதற்றித் திரியும் கனம்!

பெண்—பொன்—மண் ஆகிய மூன்று ஆசையையும் காட்டி, தாங்கள் தங்கள் மதத்திற்கு ஆள் பிடிக்கிறார்களே மதத் தரகர்கள், அதைக் காட்டிலும், நிதி அமைச்சரின் இந்த ஆள் பிடிக்கும் வேலை மகா மோசமானது! இழிவானது! அவர்களாவது ஆசை காட்டுவதோடு நின்று விடுகிறார்கள்! ஆனால் அமைச்சரோ, அமைச்சர் என்ற முறையில் அச்சத்தையும் ஆசையோடு மூட்டி ஆண்டவனடைக்கு ஆள் பிடிக்கும் வேலையில் ஈடுபட்டு இருக்கிறார்! ஐயோ பாவம்!

கடவுள் நம்பிக்கை ஒருவனின் சொந்த விவகாரம். அதைப் பொது வாழ்வில், அதுவும் அரசியல் வாழ்வில் அரங்கேற்ற, ஏனோ இந்த அமைச்சரும், அவர் குருநாதரும், கூட்டுத் தோழர்களும் அங்கலாய்க்கிறார்கள்? அவர்கள் போக்கில் மறைந்து கிடக்கும் இரகசியத்தைப் பொதுமக்கள் உணர்ந்துகொண்டால், கொஞ்ச நஞ்சம் நாட்டில் காணப்படும் கடவுள் ஆரவாரமும் விரைவில் அடிசாய்ந்து போகும். அமைச்சர்களின் போக்கு, அந்த நிலையைத் துரிதப்படுத்தத்தான் செய்யும். இந்த உண்மையைத் தெரிந்திருக்கின்ற காரணத்தால், நாம் நிதி அமைச்சர் பே... அவ்வளவாகப் பொருட்படுத்தத் தேவை இல்லை,

கல்வித்துறையில் பரிசோதனை வேண்டாம்!

எதிர்கால சந்ததிகளுக்கும் பாதகமான நிலை ஏற்படும்

ராஜ்கோட்டை, மார்ச் 14—

"கல்வித் துறையில் பரிசோதனைகளைச் செய்து எதிர்கால சந்ததிகளுக்குப் பாதகமான நிலையை ஏற்படுத்த சௌராஷ்டிர சர்க்கார் தயாரில்லை," என்று சட்டசபை கூட்டத்தை ஆரம்பித்து வைக்கையில் ராஜப் பிரமுகர் குறிப்பிட்டார்.

சேலம் இரும்புத் தொழில்

—:o:—

நம்பிக்கைத் தரும் செய்தி

சென்னை, மார்ச் 14—

நெய்வேலியில் அகப்படும் 'லிக்னைட்' (பழுப்பு நிலக்கரி) டினால் சேலம் மாவட்ட இரும்புத் தொழில் தலைதூக்க முடியும் என்று கூறப்படுகிறது.

இரும்புக் கனியுடன் 'லிக்னைட்'டைச் சேர்த்து உருக்கினால் 90 சத விகிதம் சுத்த இரும்பு எடுக்க முடியும் என்று சொல்லப்படுகிறது.

சேலம் இரும்புக் கனியில் 30 அல்லது 35 சதவிகிதம் சுத்த இரும்பு இருக்கிறது.

நெய்வேலியில் அமுல் செய்யப்பட்டு வரும் 'லிக்னைட் பைலட் திட்டம் விரைவில் பூர்த்தியாகிவிடும். 6 மாதத்திற்குள் 'லிக்னைட்' எடுக்க ஆரம்பிக்கப்பட்டு விடும்:

சென்னை, மார்ச். 14—

கிராமவாசிகளிடையே ஏற்பட்டுள்ள புது மனப்பான்மை, கட்டுப்பாடு இவைகளைக் கண்டு திட்டக் கமிஷன் உபதலைவர் மிகவும் திருப்தியடைந்ததாகத் தெரிவித்தார்.

நடுத்தரத் துணி, முரட்டுத் துணி ஏற்றுமதிகள்

—:*:—

இந்தியா ஏற்றுமதி அதிகரிப்பு!

புதுடில்லி, மார்ச் 14-

சென்ற அக்டோபரில் ஜவுளி ஏற்றுமதி கட்டுப்பாட்டிலிருந்து நடுத்தரத் துணிகள், முரட்டு துணிகள் ஏற்றுமதி போதிய அளவுக்கு அதிகரித்துள்ளது.

1953 அக்டோபரில் நடுத்தர துணி 2,29,00,000 கெஜம் ஏற்றுமதி செய்யப்பட்டது; இந்த அளவு 1954 ஜனவரியில் 4,93,00,000 கெஜமாக அதிகரித்தது; பிப்ரவரி முதல் பகுதியில் மேலும் 2,88,00,000 கெஜங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. முரட்டுத் துணி சென்ற டிசம்பரில் 2,46,00,000 கெஜம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

"சிந்தனைக் கருவி"

ஸவுத்ஹாட்லி, (மாஸாச்சூஸெட்ஸ்) மார்ச் 14—

ரோஜர் ஹோல்ம்ஸ் என்ற இங்குள்ள தத்துவப் பேராசிரியர் "சிந்தனைக் கருவி" ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். கணிதத்திற்கு எவ்வாறு கூட்டும் கருவி உதவுகிறதோ அவ்வாறே தர்க்க சாஸ்திரத்திற்கு இக்கருவி பயன்படுகிறது என்று இப்பேராசிரியர் தெரிவிக்கின்றார். 'மனித மூளை'யை விட இக்கருவியை உபயோகித்து அதிக வேகமாகவும், தவறில்லாமலும் சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க முடியும்.

சிங்சார், மார்ச். 14—

அசாமின் கைத்தறி அபிவிருத்திக்காக ரூ. 1,50,000 மானியமாகவும் ரூ. 5-லட்சம் கடனாகவும் மத்திய நிதியிலிருந்து அளிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ 3-லட்சம் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப் பயன்படுத்தப்படும்.

செய்திச் சுருக்கம்

★

நியூயார்க், மார்ச். 14—

கோதுமை தவிட்டைக் கொண்டு மேஜை நாற்காலி, கதவுகள் செய்யும் வழியைக் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது.

* * *

புதுடில்லி, மார்ச். 14—

1953—55-ம் வருடத்திய, மூன்று சதவிகிதக் கடனில், 1,72,00,000 ரூபாய் தவிர பாக்கியெல்லாம் — அதாவது ரூ 114,61,00,000 திருப்பிக்கொடுத்தாகிவிட்டது என்று கூறப்படுகிறது.

* * *

லட்சுமணபுரி, மார்ச். 14—

ஆசியாவில் இதுவரை நடைபெற்றிராத பாம்புகள் கண்காட்சி இப்போது லட்சுமணபுரியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எல்லா ரகப் பாம்புகளும், இதில் இடம் பெற்றிருக்கிறதாம்; பாம்புக் கடிக்கான சிகிச்சை மருந்து கூட இக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது.

* * *

லட்சுமணபுரி, மார்ச். 14—

பயிர்களுக்கு நாசம் விளைவிக்கும் பிராணிகளும், பட்சிகளும் ஒழித்துக்கட்டப்படவேண்டும் என்று மாநில விவசாய போர்டு சிபார்சு செய்திருக்கிறது: இது ஏற்கப்பட்டால் கிளிகள், குரங்குகள், பன்றிகள், எருமைகள் இவைகளுக்குப் போதாத காலம் என்றே சொல்லவேண்டும்.

* * *

புதுடில்லி, மார்ச். 14—

"இந்தியாவிலுள்ள சமுதாய அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவைப்படும் உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காக, இந்திய—அமெரிக்க கூட்டுறவு நிதி நிலையத்திற்கு அமெரிக்க சர்க்கார் மொத்தம் 1,05,96,000 டாலர் அனுமதித்திருக்கின்றனர்," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

• • •

புதுடில்லி, மார்ச். 14—

எதியோப்பியாவில் இந்திய விவசாயிகள் சிலர் நிரந்தரமாகக் குடியேறியுள்ளது உண்மைதான் என்று அறிவிக்கப்படுகிறது. குடியேறிய மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்களுக்கு குடியுரிமை அளிப்பதுடன், அவர்களைப் பாரபட்சமாக நடத்துவதில்லை என்னும் எதியோப்பிய சர்க்கார் உறுதியளித்திருக்கின்றனர்.

சிவகங்கையில் மஜீத் நினைவுப் படிப்பகம்

சிவகங்கை, மார்ச் 7—

சிவகங்கை நகர் பெரிய கடை வீதியில் எண் 204: கட்டிடத்தில் "மஜீத் நினைவுப் படிப்பகம்" நிறுவப்பட்டு; திறப்பு விழா வழக்கறிஞர் இரா. சண்முகநாதன், பி. ஏ. பி. எல். தலைமையில் நடைபெற்றது.

படிப்பகத்தை வழக்கறிஞர் க. இரா.சத்தியேந்திரன் திறந்து வைத்தார். 'கட்சி வேற்றுமைக்காக ஒருவரைக் கொலை புரிவதென்பது நாகரீகமற்றது மட்டுமல்ல; காணயமற்றதுங்கூட' என்று அவர் பேசும்போது குறிப்பிட்டார்.

பின்னர், தோழர்கள் கே எஸ். சந்தானம், எம். ஆர். கணேசன், சிவகங்கை கோ. மணவாளன் ஆகியோர் மஜீத்தின் ஒப்பற்ற தொண்டினையும், அவர் உயிரைக் குடித்த உலுத்தர்களின் கொடுமையையும், காங்கிரஸ் ஆட்சி இந்நாட்டை 'இடு காடாக' ஆக்கி வைத்துள்ள இழி செயலையும், புதிய கல்வித் திட்டம் திராவிட இளம் மாணவர்களைக் கசடர்களாக ஆக்கவல்ல திட்டமென்றும் பேசினர். தோழர் என். எம். ஷாகுல்ஹமீது இயக்க பாடல்களைப் பாடினார். செயலாளர் என். பி அப்துல்லா நன்றி கூறினார்.

தூத்துக்குடி சதி வழக்கு

எதிர்தரப்பு சாட்சிகள் விசாரணை ஆரம்பம்

திருநெல்வேலி, மார்ச். 14—

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் எஸ். அரிகர அய்யர் அவர்கள் முன்னிலையில் 9—3—54ல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தூத்துக்குடி தி. மு. கிளைக் கழக விளம்பர உறுப்பினர் தோழர் தாளமுத்து எதிர் தரப்பில் முதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

தோழர்கள் நெடுஞ்செழியன், மதியழகன், தூத்துக்குடி நகர சபை உறுப்பினர் தோழர் ராமலிங்கம், மற்றுமிருவர்களும் எதிர் தரப்பில் சாட்சியமளிக்க வந்திருந்தும் அவர்கள் விசாரிக்கப்படவில்லை; அவர்களது சாட்சியம் பின்னால் அவசியம் நேரும் போது பதிவு செய்யப்படலாம்.

எதிர்தரப்பு முதல் சாட்சியான தோழர் தாளமுத்து, எதிர் தரப்பு வழக்கறிஞர் பி. ஏ. தங்கசாமியால் விசாரிக்கப்பட்ட போது சொன்னதாவது:—

“நான் வசிப்பது தூத்துக்குடி; 5-வது எதிரி நடராசன் தி. மு. கழகத்தின் காரியதரிசி; அவர் கையெழுத்து எனக்கு நன்றாகத் தெரியும்; இந்த அறிக்கை (அடையாளம் காட்டி)யில் அவர் கையெழுத்து செய்திருக்கிறார்; நான் தூத்துக்குடி தி. மு. கழகத்தில் பிரசார சம்பந்தப்பட்ட உறுப்பினர்களில் ஒருவன்; இந்த அறிக்கையை தூத்துக்குடியிலுள்ள 13 தி மு கழகக் கிளைகளுக்கும் அனுப்பினேன்; வடக்கூரில் 14—7—53-ம் தேதி இரவு சுமார் 8 மணிக்கு ஒரு கூட்டம் நடைபெற்றது. அது பார்-ஸிளப்பில் நடைபெற்றது.”

சாட்சியை பிராசிகியூஷன் தரப்பில் டி. திண்ணாயிரம் பிள்ளை குறுக்கு விசாரணை செய்தார். சாட்சி கூறிய பதில்களாவன:—

“சென்ற மூன்று ஆண்டுகளாக தி மு கழகம் தூத்துக்குடியில் நடைபெறுகிறது; சுமார் 500 உறுப்பினர்கள் உண்டு; நானும் எதிரிகளில் சிலரும் கழகத்தின் முக்கிய உறுப்பினர்களில் சிலராகும்; கழகத்தின் சென்னைத் தலைமை காரியாலயத்திலிருந்து ஜூலை 15-ந் தேதியன்று ரயில்களை, சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்த வேண்டுமென்ற யோசனை டெலிபோன் மூலம் 5-வது எதிரிக்கு அறிவிக்கப்பட்டது; கூட்டத்திற்கு சுமார் 200 பேர்கள் வந்திருந்தனர்; கழகத்தின் நடவடிக்கைகளைப் பொது மக்களுக்கு விளக்கிக் கூறினேம்; முதல் மூன்று எதிரிகள் கூட்டத்திற்கு வரவில்லை.

“பொதுமக்களை ரயில் அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டோமே தவிர, மற்ற வகைகளில் மறியல்கள் செய்யும்படி கூறவில்லை; 5-வது எதிரியும் கூட்டத்தில் இதைத்தான் கூறினார்; 15-ந் தேதி நான் மேலூர் ஸ்டேஷனுக்குப் போகவில்லை; பத்திரிகையில் பார்த்த பின்னர்தான் 5-வது எதிரியும், மற்றவர்களும் ரயிலை மறியல் செய்ததாயும், கைது செய்யப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிந்துகொண்டேன்; முதலில் பத்திரிகைச் செய்தியை நம்பவில்லை; 5-வது எதிரியை ஆஸ்பத்திரியில் சந்தித்தேன்.

“நான் தூத்துக்குடி நூற்பு மில்லில் தொழிலாளி; நான் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்து சிறைவாசம் அனுபவித்து இருக்கிறேன்; கழகத்தின் அங்கத்தினர்களின் பெயர்களைக் கொண்ட பதிவேடு ஒன்றும் உண்டு; 5-வது எதிரி கழகச் செயலாளரானதற்கு முன் 2-வது எதிரி செயலாளராயிருந்தார்; முதல் எதிரி கே. வி. கே. சாமியின் பெயர் உறுப்பினராக 1952-ம் ஆண்டில், குறிப்பிடப்பட்டுள்ளது; 2, 3, 4-வது எதிரிகளின் பெயர்களும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன; ஜூலை 14-ந் தேதி நாகமணியம்மாள் வாசகசாலையில் முதல் ஐந்து எதிரிகளும் மற்றவர்களும், இருந்தார்களா என்பது எனக்குத் தெரியாது.

“நான் ரயில் நிறுத்தத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை; நான்கு பேர்கள் கொண்ட தொண்டர்கள் தனித் தனியாகச் சென்று ரயிலை நிறுத்த வேண்டும் என்பது கழகத்தின் உத்தரவு; தொண்டர்களாகச் சுமார் 30 பேர் சேர்க்கப்பட்டனர்; பகல் நேரத்தில்தான் ரயிலை நிறுத்த வேண்டுமென்றும், ரயிலை நிறுத்தச் செல்பவர்களைத் தவிர மற்றவர்கள் ரயில்வே நிலையத்திற்குப் போகக் கூடாதென்றும் கழகம் எங்களுக்கு தாக்கீது அனுப்பியிருந்தது; 5-வது எதிரி அன்று ரயில் நிறுத்தும் தொண்டர்களில் ஒருவர்; 3, 4-வது எதிரிகளை ரயில் நிறுத்தத் தொண்டர்களாக மீதவும் நான் தெரிவிக்கவில்லை.”

பொன்மலைப்பட்டி தி. மு. கழக ஆண்டு விழா

பொன்மலை, மார்ச். 12—

6—3—54 மாலை 6-45 மணிக்கு தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா, கழகக் காரியாலயத்திற்குமுன் மதுரை தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெற்றது. தலைவர் தி. மு. கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தை விளக்கிப் பேசினார்.

துணைச் செயலாளர் தோழர் என். சித்தார்த்தன் கழக ஆண்டு அறிக்கை வாசித்தபின், தோழர்கள் எம். என். ராய், வி. வி. தனுஷ்கோடி ஆகியவர்கள் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்தும், பொன்மலைப்பட்டி கிராம தெருக்களுக்கு தமிழ் மாதத்தின் பெயர்களை வைத்த பொன்மலை பஞ்சாயத்து போர்டை பாராட்டி, உடனடியாக குடி தண்ணீர், தெருவிளக்கு, ரோடு ஆகிய வசதிகளை துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்றும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் புதிய கல்வித் திட்டம் வர்ணாச்சிரம அடிப்படையில்தான் தயாரிக்கப்பட்டது என்பதை தக்க ஆதாரத்தோடு விளக்கிவிட்டு மேலும் பேசியதாவது:

“தலைவர்களை சிறையில் அடைத்துவிட்டால் கழகம் வளர்ச்சி பெறாது—தடைப்பட்டுவிடும் என்று அரசாங்கம் கருதுவது தவறு; கழகத்தின் இலட்சியக் கொள்கைகளுக்கு ஜீவ உணர்ச்சி இருக்கும் வரையில் தனி மனிதனும் தலைவனாக இருந்து பாடுபடுவான் என்பதை அரசியலார் உணரவேண்டும் வடநாடு—தென்னாடு என்ற அண்ணாவின் அறிவில்தான் தென்படுகிறது என்று கூறிப்பயனில்லை; பொன்மலை ரயில்வே ஒர்க்ஷாப் வேலைக்கு வட இந்தியாவிலிருந்து ஆட்களைத் தேர்ந்தெடுத்து, அரசாங்கம் விஷப் பரீட்சையில் இறங்க வேண்டாம்” என்று எச்சரித்தார்.

தமிழ் மாணவர் இலக்கிய மன்றம் ஆண்டு நிறைவு விழா

பொதுச்செயலாளர் அண்ணாதுரை சொற்பொழிவு

சென்னை, மார்ச். 12—

சிந்தாதிரிப்பேட்டை உயர்தரப் பள்ளியின் தமிழ் மாணவர் இலக்கிய மன்ற ஆண்டு விழா 10—3—54 மாலை 5 மணிக்கு பள்ளி மேல் மாடியில் தலைமையாசிரியர் திரு. துரைக்கண்ணு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரையில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களை வரவேற்று, தமிழ் மாணவர் இலக்கிய மன்ற ஆண்டு விழாவைப் பற்றியும், மாணவர்கள் எழுச்சியைப் பற்றியும் விளக்கிக் கூறினார்.

பின்னர், தோழர் அண்ணாதுரை அவர்கள் மாணவர்—மாணவிகள் பள்ளியில் திறம்படக் கற்றும், உலக விஞ்ஞான வளர்ச்சிக் கண்ணோட்டத்துடன் பிற நாட்டைப்போல நாமும், நமது நாடும் முன்னேற்றமடையப் பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

விதி, மோட்சம், குளத்துக்கொரு நீதி கூறும் பழைய புராண இதிகாசங்களால் இலக்கியத் துறை வளர்ச்சி பெற முடியாது என்றும், பகுத்தறிவு வளர்ச்சியோடு மக்கள் வாழ்வு வளம் பெற விஞ்ஞான மனப்பான்மை வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

“விஞ்ஞான அறிவைப் பெற மாணவ — மாணவிகள் விரும்புகின்றார்கள்; ஆசிரியர்கள், பழமையையும், மூடநம்பிக்கையையும் வளர்க்கும் புராணக் கதைகளைக் கூறி, அவர்களுடைய அறிவு வளர்ச்சியைத் தடைசெய்யக்கூடாதென்றும் வேண்டிக் கொண்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

“தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தடையாக பிறமொழி ஆதிக்கம் ஏற்படுவதை தடுத்தே தீரவேண்டும். இந்தியால் தமிழ் மொழி கெடாது என்று கூறும் வாதம் ஒப்புக்கொள்ள முடியாது. தமிழ் நாட்டில் தமிழ் மொழி, ஆட்சி மொழியாக அமைதல் வேண்டும்.” என்றார்.

தலைவர் முடிவுரையுடன், நன்றி கூற விழா முடிவு பெற்றது.

சூளேசுவரன்பட்டி தி. மு. கழகக் கிளை

8—3—54-ல், நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள், அ. மதிவாணன், ஏ. எஸ். ஏ. சாமி, க. மணிமொழியன், பொன்னரசி மா. அரமணி, மு. வழவன் ஆகியோர் சொற்பொழிவாற்றியபின், செயற்குழு அமைக்கப்பட்டது: இரா. ஆறுமுகம் செயலாளர்; அ. மதிவாணன் துணைச் செயலாளர்; இரா. குப்புசாமி பொருளாளர்; ஏ. எஸ். ஏ. சாமி மாவட்டப் பிரதிநிதி; உறுப்பினர்கள்: உ. திருமலை, க. மணிமொழியன், ப. கா. ராமசாமி, சி. செல்லப்பன், க. மாரியப்பன், சு. ஈசுவரன், கே. நடராசு, ஆர். ராமசாமி ஆகியோர்.

பம்பாய் தி. மு. கழக செயற்குழு கூட்டம்

8—3—54 மாலை சுமார் 7-30 மணிக்கு கழகப் பணி மனையில் தோழர் சி. த. மு. இரா. ஆரிய சங்காரன் தலைமையில் நடைபெற்றது. 1—1—54 முதல் 28—2—54 முடிய உள்ள வரவு-செலவு கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டு, பல முக்கிய விடயங்கள் தீர்மானிக்கப்பட்டு, பல அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தியாவிலுள்ள கோயில்கள்

விவரங்கள் சேகரிக்கப்படும்

புதுடில்லி, மார்ச். 14—

இந்தியாவில் எங்கெங்கு என்னென்ன கோவில்கள் உள்ளன; அவை எப்போது கட்டப்பட்டன; அவை பற்றிய வரலாறு என்ன—என்பன போன்ற தகவல்களை இந்திய சர்க்கார் கல்வி இலாகா சேகரிக்கும். இதற்காக வட இந்தியாவுக்கு ஒருவருமாக தென் இந்தியாவுக்கு ஒருவருமாக இரு விசேட அலுவலர்களை நியமிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி தி. மு. கழகக் கிளை

7—3—54 இரவு 9 மணிக்கு, கா. கிருஷ்ணன் தலைமையில் பாளையங் கோட்டை ரோடு, தி. மு. கழகக் கிளை செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அது போது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கும் வரை தற்காலிகமாக தோழர்கள் எம். ராசபாண்டி, கே. கருப்பசாமி, கே. எஸ். கந்தசாமி, எம். வடிவேல், எ. பெருமாள் ஆகியோரை பொறுப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், பின்னர், தோழர் வி. வி. தனுஷ்கோடி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப் பட்டதுடன், மேலூர் ஜூபிலி பார்க்கை ‘வி. வி. தனுஷ்கோடி பூங்கா’வென்று மாற்றி, அவருடைய உருவச் சிலையை அதில் வைக்கும்படி நகர சபையை கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிராண்ட்பாஸ் தி. மு. கழகம்

இலங்கை தி. மு. கழகக் கிராண்ட்பாஸ் கிளையின் நிர்வாகிகள் தேர்தல் கழகப் பணிமனையில் 7—3—54 மாலை 5 மணியளவுக்கு நடைபெற்றது:

செயலாளர்: இளவழகன்; துணைச் செயலாளர்: இராவண மாணிக்கம்; பொருளாளர்: எஸ். எஸ். மணி; செயற்குழு உறுப்பினர்கள்: கணேசன், ஏ. பெரியண்ணன், எஸ். கே. மொகிதீன், ஆர். ஆர். கே. டெயிலர், வீர. மதியழகன், ஜலால், ஏ. எம். துரைசாமி, டி. எம். பீர்மகம்மது, எஸ். அப்பு, பி. எம். அலியார், எஸ். எம். மீரான், சுப. இராசமாணிக்கம்.

நீடாமங்கலத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

7—3—54 மாலை 6 மணிக்கு சீனிவாசப்பிள்ளை சத்திரத்திற்கு எதிரில் தோழர் த. இராமு தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர் மா. ஆறுமுகம், எஸ். எம். வைத்தியலிங்கம், சிற்றூசி சுப்ரமணியம் ஆகியோர் புதிய கல்வித் திட்டத்தினால் கிராம, நகர மாணவர்கள் அடையப்போகும் அல்லல்கள் குறித்தும், இத்திட்டம் உலகில் உருப்படாத் திட்டம் என்றும், திட்டத்தைக் கைவிடுமாறும் குறிப்பிட்டுப் பேசினர்.

புதிய வரிக்கு எதிர்ப்பு!

6—3—54 பகல் 2 மணியளவில், காசுக்கடை இரத்தின வியாபாரிகளின் அவசரக் கூட்டம் அ. த. அ. நடராசன் (செட்டியார்) தலைமையில் நடைபெற்றபோது, தங்கம், வெள்ளி, கற்கள் போன்றவைகளுக்கு அரசாங்கம் மேலும் வரி விதித்திருப்பதால், அவ்வேலையிலீடுபட்ட தொழிலாளர்களுக்கும், வர்த்தகர்களும் பாதிக்கப்படுவோராதலால், இவ்வரியைத் தள்ளி வைக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளப்பட்டது. அன்று முடையடைப்பும் நடை

ஆசிரியருக்கு கடிதம்

காஞ்சி கண்காட்சி!

ஆசிரியர்: ‘நம் நாடு’
சென்னை-18.

ஐயா,

காஞ்சிபுரம் நகராட்சி அனைத்து இந்திய பொருட்காட்சி விழா 9 3-54 தேதி செவ்வாய் மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. இக் கண்காட்சியை இந்த நகரசபையே நடத்துவது குறிப்பிடத் தக்கது. இதற்காக ஒட்டப்பட்டிருந்த விளம்பரத் தாளில், இக் கண்காட்சியில் சாவுக் கிணறு வித்தை, மின்விசை ராட்டினம், மின்சார இரயில், ஏரோபிளேன், கப்பல் ஓட்டம், பொம்மலாட்டம் முதலியவைகள் காட்டப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கின. ஆனால் ஆரம்ப விழாவாகிய 9—3—54-ந் தேதி சென்றபோது, இவைகளைக் காணமுடியவில்லை. ஆரம்ப விழாவாகையால் இவைகளில் இரண்டொன்று இல்லாமல் இருக்கலாம் என எண்ணிடமுண்டு; ஆனால், மேல் சொன்ன காட்சிகளில் எவையாவது ஒன்று இருக்குமென தேடிப்பார்த்தாலும் காணோம். இவைகளும் ஜால வித்தைகளில் ஒன்றோ என்று மக்கள் பேசிக் கொள்ளும் அளவுக்கு நிலைமை இருக்கிறது.

கண் காட்சியில் விளம்பரப் படுத்தியபடி இல்லாதபோது, கட்டணம் நான்கு அணா வசூலித்தது பொருத்தமுள்ள செய்கைதானா?

இவைகளை, ஏன் எடுத்துக்கூற விரும்புகிறேன் என்றால், நகர சபையின் உயர்வு தாழ்வு என் போன்ற காஞ்சிமா நகர வாசிகளைச் சேர்ந்தது என்பதை பார்க்கும்போது, விளம்பரப்படுத்தியபடி நடக்காதது மக்களை ஏமாற்றத்தான் செய்யப்பட்டது என ஏன் சொல்லக்கூடாது? இல்லையென்றால், விளம்பரப்படுத்தியபடி, ‘இவைகள் இன்னும் கண் காட்சிக்கு வரவில்லை; ஆகவே, வரநாள் ஆகும் அல்லது இந்த தேதியில் வரும்,’ என்று ஏன் முன் கூட்டியே பொது மக்களுக்கு விளம்பரப்படுத்தியிருக்கக் கூடாது? அல்லது அன்றைய தினம் இவ்வித காட்சிகள் இல்லாததற்குக் கட்டணம் வசூலிக்காமலாவது விட்டிருக்க வேண்டும்.

ஆகவே, பொதுமக்களிடமிருந்து எவ்விதமாவது பணம் பறிக்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகத்தான் இவ்வாறு செய்யப்பட்டது என பொதுமக்கள் கருதினால், அது எப்படி தவறாகும்? பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்கள், பொதுமக்களுக்கு எழும் இந்தச் சந்தேகங்களுக்கு தக்க பதில் அளித்து இந்நகரசபையின் நன்மதிப்பை காப்பாற்றுவார்கள் என எண்ணுகிறேன்.

எ. சி. குருசாமி,
காஞ்சி, 10—3—54.

கடையநல்லூர் பஞ்சாயத்து போர்டு

6—3—54-ல், தலைவர் எஸ். கே. முகம்மது யூசுப் தலைமையில் நடைபெற்ற போர்டின் அவசரக் கூட்டத்தில், பஞ்சாயத்துப் போர்டு அலுவலகக் கட்டிடம் சொந்தமாகக் கட்டுவதென்று முடிவு செய்து, எஸ். 11 மெயின் ரோடுக்கு அருகாமையிலுள்ள வாரச் சந்தை கூடும் காம்பவுண்டில் கட்டிடம் கட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பட்டிவீரன்பட்டி பாண்டியனார் நினைவுப் படிப்பகம்

சாவிச்சந்தை, மார்ச். 12—

“இயற்கை எய்திய தோழர் வி. வி. தனுஷ்கோடி அவர்களின் குடும்பத்தினருக்குப் படிப்பகத்தின் சார்பில் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்,” என்று கே. பி. ஜோதி அறிவிக்கிறார்.

திரு—கொச்சியில் ஐக்கிய முன்னணி மந்திரி சபை அமைக்கும்?

—(:)—

அடிப்படைத் திட்டங்களுடன் ஒத்துழைக்க பி.—சோ. கட்சி நிபந்தனை !

திருவனந்தபுரம், மார்ச். 15—

பி.—சோ. கட்சியின் கொள்கைகள், காரியத் திட்டங்கள் அடிப்படையிலும், திரு-கொச்சி மாநிலத்தின் நலனுக்காக ஐக்கிய முன்னணி செயலாற்றும் வரையிலும், காங்கிரஸ் பதவிக்கு வராமல் செய்யவும், அரசியல் நெருக்கடி ஏற்படாமல் தடுக்கவும், ஐக்கிய முன்னணி அமைக்கும் மந்திரி சபையை ஆதரிக்க திரு—கொ பி.—சோ. கட்சி தீர்மானித்துள்ளது.

திரு—கொச்சி சட்டசபை ஐக்கிய முன்னணிக் கட்சிக்கு டி. வி. தாமஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு தாமஸ் தாம் தலைவராகி யுள்ளதை ராஜப் பிரமுகருக்குத் தெரிவித்து, 'தம்மால் மந்திரி சபை அமைக்க முடியும் என்றும், தம்மை அதற்கு அழைக்க வேண்டும்,' என்றும் கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது.

முன்னாள் பிரதமர் குத்தப்பட்டார்

தெஹ்ரான், மார்ச். 15—

முசாதிக் சர்க்காரில் அயல் நாட்டு மந்திரியாக இருந்து, முசாதிக் கவிழ்க்கப்பட்ட பின்னர், தலைமறைவாக இருந்த உசேன் பதேமி கைதி செய்யப்பட்டு சிறைக் கூடத்திற்கு அழைத்துச் செல்லப்படுகையில், இரகசிய நிறுவனத்தின் தலைவர் ஜபாரியால் ஐந்து முறை கத்தியால் குத்தப்பட்டு பலத்த காயமடைந்து அபாயகரமான நிலைமையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர், தெஹ்ரானுக்கு வடக்கே 7 மைல் தூரத்திலுள்ள எல்பர்ஸ் மலை அடிவாரத்தில் ஒரு முனிசிபல் அதிகாரியின் வீட்டில் ஒளிந்துக் கொண்டிருந்தாராம்.

கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு

சென்னை, மார்ச் 15—

"1952—53ம் ஆண்டில், இந்த மாநிலத்தில், 206 கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிப்பளிக்கப்பட்டிருக்கிறது" என்று சென்னை சட்டசபையில் ஐந்தாண்டு திட்டப்படி ஆண்டுக்கு 220 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கக் கணக்கிடப்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டது.

யானைக்குப் பலி!

கோயம்புத்தூர், மார்ச் 13—

சுமார் 40 பேர்கள் வனாந்தரக் காட்டில் மரம் வெட்டிக்கொண்டிருந்தபோது ஒரு மதம் பிடித்த யானை அவ்விடத்தில் தோன்றி அவர்களை விரட்டியடித்து ஒரு மர வெட்டியைக் காலால் மிதித்துக் கொன்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

கூவம் நதி நாற்றம்—ஒழிக்க முயற்சி!

சென்னை, மார்ச் 14—

கூவம் நதியின் நாற்றத்தை ஒழிக்க மராமத்திலாகா திட்டம் போட்டுள்ளது. நதியின் முகத்துவாரத்தில் மேடிட்டிருக்கும் மண் மேட்டை அகற்ற ஒரு சாதனம் வாங்கப்பட்டு, அது பழுதாகி விட்டது.

இந்த மண்மேட்டை இடித்து வழி செய்துவிட்டால் பக்கிங்காம் கால்வாய் சமுத்திர மட்டத்திற்குத் தாழ்வாக இருப்பதால் சமுத்திர நீர் உள்ளே வந்துவிடும் என்று கூறப்படுகிறது. நதியின் முகத்துவாரத்திலிருந்து சமுத்திரத்திற்கு சிமெண்ட் குழாய்கள் அமைக்க இப்போது யோசிக்கப்பட்டு வருகின்றன.

பாலாறு மீது மேம்பாலம்

ரூ. 21 லட்சம் செலவில் கட்டப்படும்?

புதுடில்லி, மார்ச் 15—

இராணிப்பேட்டைக்கும் - ஆற்காட்டுக்கும் இடையே பாலாறு மீது ஒரு மேம்பாலம் ஒன்று 21 லட்சம் ரூபாய் செலவில் கட்டும் திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது; இந்தப் பாலம் 1954—55ல் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மூன்று ஆண்டுகளில் கட்டி முடிந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது," என்று, மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

பாக் - துருக்கி கூட்டு

பிரிட்டனும் இணையுமா?

லண்டன், மார்ச் 14—

அமெரிக்கா - துருக்கி—பாகிஸ்தான் இராணுவக் கூட்டுடன் இணைப்பு ஏற்படுத்திக்கொள்ள பிரிட்டன் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. குபசிலுள்ள தனது இராணுவ சாதனங்களை சைப்ரஸ், ஜோர்தான், துருக்கி நாடுகளுக்கு பிரிட்டன் மாற்றிக் கொள்ளக்கூடும்.

சிங்கப்பூருக்குக் கப்பல் தபால்

'எஸ். எஸ். ஜலகோபால்' என்னும் கப்பல் சென்னையிலிருந்து 18-ந் தேதியன்று சிங்கப்பூருக்குப் புறப்படும். நகர கிளைத் தபால் நிலையங்களில் மார்ச் 17ந் தேதி காலை 10 மணிக்கு முன்னும், சென்னை ஜி. பி. ஓ-வில் அன்று பிற்பகல் 3 மணிக்கு முன்பும், போடப்படும் தபால்கள் அக்கப்பலில் சேரும்.

சிங்கப்பூரில் விமான விபத்து:

எம். சி. டி. எம். சிதம்பரம் (செட்டியார்) காலமானார்

—:0:—

32 பேர் வெந்து மடிந்தனர்!

சிங்கப்பூர், மார்ச் 13—

பி. ஓ. ஏ. சி. விமானமொன்று இங்கு கல்லாங் விமான நிலையத்தில் நொறுங்கி, தீப்பிடித்துக் கொண்டு எரிந்தது. அதிலிருந்த ஒரு விமானமோட்டி உட்பட 24 ஆண்களும், 8 பெண்களும் விபத்தின் விளைவாக இறந்தனர்.

அவ்விமானம் கீழே இறங்கும் போது சரியாகவே இறங்கியதாகவும், கீழே இறங்கி சிறிது தூரம் ஓடியதும் நிலை தடுமாறி சப்தத்தோடு வெடித்து, தீப்பிடித்துக் கொண்டு எரிந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. ஆகாயத்தில் 1,000 அடி உயரத்திற்கு புகை கிளம்பியதாம்.

உயிரிழந்தவர்களில் சென்னை இந்தியன் ஓவர்சீஸ் பாங்கியின் தலைவரும், பிரபல தொழிலதிபரும், வியாபாரியுமான திரு. எம். சி. டி. எம். சிதம்பரம் (செட்டியார்) ஒருவராவார். அவர் வியாபார நிமித்தம் தூரக் கிழக்கில் சுற்றுப் பிரயாணம் சென்றிருந்தார். சிங்கப்பூரில் 2 நாள் தங்கி சென்னைக்கு திரும்ப உத்தேசித்திருந்தாராம்.

அவருக்கு வயது 46 மனைவியும், இரு புதல்வர்களும், ஒரு தம்பியும், இரு சகோதரிகளும் இருக்கின்றனர்.

அவருடைய சடலத்தை இந்தியாவுக்குக் கொண்டுவர விசேட விமானம் ஒன்றும் கிடைக்காததால் அவரின் உறவினர்கள் வேண்டுகோளின்பேரில் சிங்கப்பூரிலேயே இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

பிராகரி இந்து மயானத்தில் அவரது பிரேதம் கொண்டுவரப்பட்டு இந்து வைதீக முறைப்படி சந்தனக் கட்டைகளை அடுக்கி தகனக் கிரியை நடைபெற்றது.

ஆற்காடு இராமசாமி எச்சரிக்கை......

—:0:—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது என்ற காரணத்தால், இந்தக் கருத்து வேறுபாடுடைய ஆட்சேபணைகளை மதியாமல் நடப்பவர்கள் இந்தத் தேசீய மொழியின் நோக்கத்திற்கு பெரியதொரு தீங்கைச் செய்பவர்களாவார்கள்."

—இவ்வாறு பீகார் பல்கலைக் கழகத்தின் வருடாந்திரப் பட்டமளிப்பு விழாவில் சொற்பொழிவாற்றுகையில், டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் குறிப்பிட்டு, தொடர்ந்து பேசியதாவது:—

"அறிவுக் கருவூலம் நிறைந்துள்ள ஆங்கில மொழிக் கல்வியை நாம் தடை செய்வது, நமது முன்னேற்றத்தை நாமே தடை செய்து கொண்டதாகும்.

"கல்லூரிகளில் பெரும் அளவு ஆங்கிலக் கல்வி தரப்பட வேண்டியது மிக அவசியமென நான் கருதுகிறேன். அப்படித் தரப்பட்டால்தான் விஞ்ஞான, தொழில் துறைக் கல்வியை, மாணவர்கள் பல ஆண்டு காலத்திற்கு முறையாகப் புரிந்துகொள்ள முடியும்."

"சுதந்திரம் பெற்றது, ஜனநாயக அரசுகளின் அரசியல் அமைப்புகள், மந்திரிகளிடம் உள்ள அதிகாரங்கள் இவையெல்லாம் ஓரளவுக்கு, கல்வியின் அடிப்படை இலட்சியங்களையே இருளாக்கியிருக்கின்றன என்று கருதுகிறேன்."

"ஒன்றுக்கு மேற்பட்ட பல கல்வி மந்திரி சபைகள், கல்வித் துறையில் வால் முதல் தலை வரை மாற்றம் தேவை என நினைத்து, பழைய முறைகளை அடிப்படை மாற்றி[illegible] தாங்கள் எந்த நோக்கத்திற்காகக் கல்வி இருக்கவேண்டுமென நினைக்கிறார்களோ, அந்த நோக்கத்துடன் புதிய முறைகளைப் புகுத்துவது, மிகவும் துரதிருஷ்டவசமானது.

"கல்வியின் நோக்கமெல்லாம் வெறும் பிரச்சாரமல்ல; மாறாக, கல்வி, பிரச்சாரத்திற்கு முரணானது; கல்வி நிபுணர்களின் நோக்கமெல்லாம், விசாரிக்காமலும், காரணமின்றியும் காரியமாற்றும் மனப்பான்மையிலிருந்து மாற்றி, புதிய உண்மைகளையும் கருத்துக்களையும் ஏற்கும் வகையில் மனதைப் பக்குவப்படுத்துவதேயாகும்."

"இன்று இந்தியாவில் உள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களையும் எதிர்நோக்கியிருக்கும் முக்கிய பிரச்னை, கல்வி நிலையங்களின் நடைமுறை வேலைத் திட்டங்களில் சர்க்கார் தலையிட்டால் மேற்கண்ட உயர்ந்த நோக்கம் எந்த அளவு ஈடேற முடியும் என்பதே."

வடநாட்டு பிணைப்பை......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"நாம்—தென்னாட்டைச் சேர்ந்த திராவிடர்களாகிய நாம்—இந்தியா என்ற அரசியல் அமைப்பில் ஒரு அங்கமாக இருப்பதால், மேற்கூறிய வாழ்க்கை வசதிகள் நமக்குக் கிடைக்கின்றனவா என்றால், 'இல்லை,' என்றுதான் சொல்ல வேண்டும். தென்னாட்டின் மானாபிமானம், வாழ்வு, வளம் இவை காப்பாற்றப்பட வேண்டுமானால், அது நிச்சயமாக வடநாட்டிலிருந்து பிரிந்துதான் ஆகவேண்டும்,"

என்று, அதற்குரிய காரணங்களை புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டி, சென்னை, வியாசர்பாடி தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற தூத்துக்குடி நிதியளிப்பு விழாக் கூட்டத்தில், தி.மு. கழகக் கொள்கைகளை விளக்கி தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, 'பிரிந்தால், வாழாது' என்போருக்குப் பதிலளித்துப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"1,000 பேரைக் கொண்ட வாடிக்கன் நகரம் ஒரு நாட்டிற்குரிய எல்லா அந்தஸ்துகளையும் பெற்று வாழ்கிறது; 5,000 பேரைக் கொண்ட அண்டோரா, 15,000 பேரைக் கொண்ட சான்மெரினோ, 22,000 பேரைக் கொண்ட மொராக்கோ, கிரீன்லாந்து, 3 லட்சம் பேரைக் கொண்ட லக்சம்பர்க் இவை எல்லாம் தனித் தனியாக வாழும்போது ஏழேமுக்கால் கோடி திராவிடர்கள் ஏன் தனியாக வாழ முடியாது?"

என்ற பல்வேறு காரண காரியங்களை எடுத்துக் காட்டி, 'நாம் ஏன் திராவிடம் பிரிய வேண்டும்' என்று சொல்கிறோம் என்பதை தெளிவாக்கியதுடன், சமுதாயத் துறையில் தி. மு. கழகத்தினரின் கொள்கைகளையும் விளக்கினார்.

12—3—54 மாலை 6-30-க்கு சென்னை 6-வது வட்டம் வியாசர்பாடி தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி நிதியளிப்புக் கூட்டம், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர். கூட்ட இறுதியில் தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக, கழகச் செயலாளரால், தோழர் நெடுஞ்செழியனவர்களிடம் ரூ. 75 கொண்ட பண முடிப்பொன்று தரப்பட்டது.

தலைமை தாங்கிய தோழர் காஞ்சி - கல்யாணசுந்தரம் அவர்கள், குறிப்பிட்டதாவது:—

"ஆட்சிபீடத்திலேறியிருக்கும் ஆச்சாரியார் முறையற்ற வகையில், தான் ஆட்சிபீடம் ஏறியதை மறந்துவிட்டது மட்டுமின்றி, முறையற்ற ஆட்சியும் நடத்திவருகிறார். இது நாள் வரையில் இருந்த ஆரம்பக் கல்வித் திட்டத்தை தன்னிச்சையாக, எதேச்சாதிகாரமாக மாற்றி விட்டு, புதியதொரு திட்டத்தை யாரையும் கேட்காமலேயே புகுத்தி, திராவிடச் சிறுார்களின் கல்விக் கண்ணை அவித்துவிட எண்ணுகிறார் புதிய திட்டத்தால், நமது சமுதாயத்திற்கு ஏற்பட இருக்கும் கேடுகள் பற்றி நாம் எந்த முறையில் சொல்லியும் அவர் திருந்திக் கொள்ளாததால்தான், அமைதியாக மறியல் செய்தாவது அவருக்கு நமது எதிர்ப்பை உணர்த்துவோம் என்று அறப்போர் துவங்கினோம்; அவ்வோ தும் அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டாரே யன்றி, நாம் திட்டத்தில் எடுத்துக்காட்டிய நியாயமான குறைபாடுகளைப் போக்க, அவைகளுக்கு நேர்மையான சமாதானம் சொல்ல முன்வரவில்லை. ஒரு ஜனநாயக நாட்டில் உள்ள அரசாங்கம் கொண்டு வரும் ஒரு திட்டத்திற்கு மக்களிடமிருந்து சிறிய எதிர்ப்பு இருந்தாலும் அந்தத் திட்டத்தை திரும்பிப் பெற்றுக்கொள்வதுதான் ஜனநாயக அரசியல் பண்பாடு; ஆனால் ஆச்சாரியாரோ, எதிர்ப்பு எவ்வளவாக இருந்தாலும் அந்த எதிர்ப்பை மதியாமலேயே ஆட்சி செலுத்துவது ஜனநாயகமுமல்ல — நியாயமுமல்ல,"

—என்று ஆச்சாரியாரின் போக்கை சுட்டிக் காட்டிவிட்டு, புதிய கல்வித் திட்டத்தின் குறைபாடுகள் ஒவ்வொன்றையும் தக்க ஆதாரங்களுடன் விளக்கிக் காட்டினார்.

அடுத்து தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தனது அரசியல் பரம்பரை விரோதியையும் மன்னிக்கும் மனப்பண்புகொண்ட பொதுச் செயலாளர் அண்ணாவின் பெருந்தன்மை எங்கே? ஒரே நாளில் 5000-க்கு அதிகமான தோழர்களை சிறைக்குள் அனுப்பியும் சிதையாத மக்கள் இயக்கத்தை—அதன் தலைவர்களை நாவடக்கமின்றி ஏசித் திரியும் பண்டிதரின் சிறுமதி எங்கே?"

என்று குறிப்பிட்டு, 'தி. மு. கழகம் சமீப காலத்தில் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டது ஏன்?' என்பதை விளக்கிப் பேசினார்.

கவர்னருக்கு ரிக்ஷா!

புதுடில்லி, மார்ச். 14—

இமாசலப் பிரதேச கவர்னரின் உபயோகத்திற்கு ரிக்ஷா வசதியும் ஏற்படுத்தி தர மத்திய சர்க்கார் முன்வந்துள்ளது.

இமாசலப் பிரதேசத்தின் தலைமைக் காரியாலயம் இருக்கும் இடத்தை உத்தேசித்தே இவ்வசதி அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தஞ்சை மாவட்டத்தில் அரிசி கொள்முதல்

சென்னை, மார்ச் 13—

"1954-ல் தஞ்சை மாவட்டத்திலிருந்து 75,000 டன் அரிசியை 'லெவி' முறையில் கொள்முதல் செய்வதென நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; அதன்படி இந்த மொத்த அளவும் கொள்முதல் செய்யப்படுமென நம்பப்படுகிறது" என்று சட்டசபையில் உணவு மந்திரி அறிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அமுதம் அச்சகத்தில் அச்சிட்டுப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. என். [illegible]